# அரையாண்டுத் தேர்வு – 2025

**8 – ம் வகுப்பு**

## தமிழ்

நேரம் : 2.30 மணி | மதிப்பெண் : 100

### பகுதி – I ( மதிப்பெண்கள் : 20 )

I) **சரியான விடையைத் தேர்வு செய்க.** 10×1=10

1. தமிழ்த்தாய் ஐம்பெருங்காப்பியங்களை _____அணிந்துள்ளாள்.
அ) மாலையாக ஆ) ஆடையாக இ) அணிகலன்களாக ஈ) மகுடமாக

2. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ______
அ. வலிமையற்றவர் ஆ. கல்லாதவர் இ. ஒழுக்கமற்றவர் ஈ. அன்பில்லாதவர்

3. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ___ காரணமாக அமைந்தது.
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை

4. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் _____.
அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து

5. வானில் கரு _____ தோன்றினால் மழை பொழியும் என்பர்.
அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்

6. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது _____.
அ) புல் ஆ) நெல் இ) உப்பு ஈ) மிளகு

7. 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) அ + களத்து ஆ) அக் + களத்து இ) அக்க+ அளத்து ஈ) அம் + களத்து

8. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் _____ எனப்படும்.
அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

9. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது _____ நீட்சியாகவே உள்ளது.
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்

10. முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
அ) முழவுதிர ஆ) முழவுதிரை இ) முழவதிர ஈ) முழவுஅதிர

II) **கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5×1=5

11. பின்னலாடை நகரமாக ____________ விளங்குகிறது.
12. புறஉலக ஆராய்ச்சிக்கு ____________ கொழுகொம்பு போன்றது.
13. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ______.
14. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ________என அழைக்கப்பட்டன.
15. இசைக் கருவிகள்____________ வகைப்படும்.

III) **பொருத்துக.** 5×1=5

| | | |
|---|---|---|
| 16. இயற்கை அன்பு | – | வினையெச்சம் |
| 17. ஆடிநாள் | – | பத்துப்பாட்டு |
| 18. மாங்கனி நகரம் | – | பெரிய புராணம் |
| 19. நடந்து | – | தன்வினை |
| 20. இயற்கை ஓவியம் | – | சேலம் |

### பகுதி – 2

IV) **அடிபிறழாமல் எழுதுக.** 4+2=6

21. அ) ' ஆற்றுதல் 'எனத் தொடங்கி ' நோன்றல் ' என முடியும் பாடறிந்து ஒழுகுதல் பாடலை அடிமாறாமல் எழுதுக. **(அல்லது )**
ஆ) ' வாழ்க நிரந்தரம் ' எனத் தொடங்கி ' என்றென்றும் வாழியவே' என முடியும் பாடலை எழுதுக.

22. ' சொல்லுக ' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பகுதி – 3

V) **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5×2=10

23. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
24. ' தமிழ்நாட்டின் ஹாலந்து ' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?
25. முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?
26. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
27. கொல்லிமலையைப் பற்றி பாடல் கூறும் செய்தி யாது?



TNPSC JOB | www.tnpscjob.com

28. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
29. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?

VI) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

30. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
31. தன்வினை என்றால் என்ன?
32. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
33. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கிறது?
34. மயங்கொலி எழுத்துகள் யாவை?
35. வினைமுற்று என்றால் என்ன?

VII) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×3=15

36. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
37. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?
38. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
39. தமிழையும் கடலையும் ஒப்பிட்டுத் தமிழழகனார் கூறுவன யாவை?
40. புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?
41. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
42. நமக்கு இருக்க வேண்டிய பண்புநலன்களாக நல்லந்துவனார் கூறுவன யாவை?

## பகுதி – IV

VIII) கடிதம் எழுதுக. 1×5=5

43. அ) இருப்பிடச் சான்றிதழ் வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக. *( அல்லது )*
ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

IX) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5×2=10

44. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) பூ, ______ வீசும் ( மனம் / மணம் )
ஆ) கடலுக்கு வேறு பெயர் ________ ( பரவை / பறவை )
45. பின் வரும் மரபுத் தொடர்களைப் பொருளோடு பொருத்துக.
அ) ஆயிரங்காலத்துப் பயிர் – விரைந்து வெளியேறுதல்
ஆ) கம்பி நீட்டுதல் – ஆராய்ந்து பாராமல்
– நீண்ட காலமாக இருப்பது.
46. சரியான இணைச் சொற்களை இட்டு நிரப்புக.
( போற்றிப் புகழப்பட, ஈடு இணை, கல்வி கேள்வி )
அ) சான்றோர் எனப்படுபவர் ___________ களில் சிறந்தவர் ஆவர்.
ஆ) இசைக் கலைஞர்கள் _________ வேண்டியவர்கள்.
47. திருக்குறளைச் சீர்பிரித்து எழுதுக.
தக்கார் தகவிலரென்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.
48. படிப்போம்; பயன்படுத்துவோம்!
அ) VOWEL ஆ) FACTORY
49. சொற்களை முறைப்படுத்தி முறையான தொடராக்குக.
அ) ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.
ஆ) உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்

## பகுதி – V

IX) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3×8=24

50. அ) கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக. *( அல்லது )*
ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
51. அ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.
*( அல்லது )*
ஆ) காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக
52. அ) நான் விரும்பும் கவிஞர் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. ( அல்லது )
ஆ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை.



TNPSC JOB | www.tnpscjob.com